REGD No M 4847

# திராவிடநாடு

விலை அணா 2. சிலோன் 15 சதம்

மலர் 10 | 25—5—52 | இதழ் 47

சிறுகதை

# 'உலகம்' யாருக்கு?

[அண்ணல்]

"டிரியோ..... டிரியோ...டியோ ...டியாலே!!"

ஆடிக்கொண்டிருந்தாள் அவள், அஞ்சான் அதை ரசித்துக்கொண்டிருந்தான். ஆண்டையின் குரல் அவனை 'மாய' உலகிலிருந்தும் களத்துமேட்டுக்கு இழுத்துவந்தது "டேய்! பொழுது சாயுதடா. நெல்லைக் குவிங்க......"

என்று நீண்ட ஓர் கனைப்பைத் தந்துவிட்டு, 'அங்காடிக் கூடை'யைப் பார்த்தார். அவர் மகன், குமரன், அங்காடிக்கூடைக்கார அம்மாளிடம் பேசிக்கொண்டிருந்தான். குமரனைப் பார்த்தார், கோவிந்தப் பிள்ளை — குறும்புத்தனம் செய்துவிடப்போகிறான் பிள்ளை, என்கிற கவலையோடு. ஏனெனில் அங்காடிக்கடை அம்மாளுவின் பெண் அலமேலுவும், அங்குதானிருந்தாள்!

"பெண்—பஞ்சு; ஆண்—நெருப்பு. இரண்டும் அருகே இருப்பது ஆபத்து" இது, அவரது அனுபவ சித்தாந்தம். அதிலும் குமரன் காலேஜிலிருந்து வந்திருப்பவன். கானே! கனைத்தார். அதைக் கண்டுகொள்ளாததுபோலிருந்தான் குமரன் இருந்தானா? ஓசையில்லாத 'பாஷைகள்' பேசிக்கொண்டிருந்தான், ஒய்யாரமாக வைக்கோர் போரில் சாய்ந்து நின்ற அலமுவிடம்! 'காட்டிலே மலர்ந்த'ரோஜா' என்று எண்ணியபடி, 'ஏம்மா! எல்லாம்வித்து துங்களா?' என்றான், அலமுவின் அம்மாவிடம். 'எங்கேதம்பி? தோசையும் வடையும் அப்படியே இருக்கே' என்று சோகத்தோடு கூறிவிட்டு, பக்கத்து களத்துமேட்டிலிருந்து யாராவது வருவார்களா என்று ஆசையோடு நோக்கினாள்...

இந்த நேரத்தில,

அலமுவின் கை, குமரனுக்கு சுண்டலை எடுத்துக் கொடுத்தது, 'நல்லாருக்கே' என்று ஒரே வார்த்தையில் அம்மாவுக்கும் மகளுக்கும் பதில் தந்தான், அவன். கோவிந்தப் பிள்ளை, மீண்டும் திரும்பிப் பார்த்தார்; கனைத்தார்.

டியோ....டியோ....டியோ...டிரியாளோ......!

அஞ்சானின், இதயத்தில் பனித்துளிகள்போல, இந்தக் குரல் விழுந்துகொண்டிருந்தது. தலையில் கட்டிய 'முண்டாசை' எடுத்து உடம்பிலிருந்து ஓடும் வியர்வையைத் துடைத்துக்கொண்டு, 'மரக்காலை' எடுத்து 'லாபம்' என்று ஆரம்பித்தான்! 'ஒண்ணு' என்பது விவசாயிகள் பாஷையில் 'லாபம்! லாபம்....ரெண்டு.....மூணு....மூட்டைக்குள் நெல்லை வீசிக்கொண்டிருந்தது மரக்கால். அவனது கண்களோ, அவள்மீது 'பார்வை'யை வீசிக்கொண்டிருந்தன அந்தக்குறப்பெண், தனது 'புராமை'ச் சொத்தான தகர டப்பாவைத் தட்டிய வண்ணம் 'சங்கீதச் சப்தம்' எழுப்பிக்கொண்டிருந்தாள்.

எறும்புகள் போல் ஓடியாடிக்கொண்டிருந்த ஆதித்திராவிட விவசாயிகள் எவரையும் அந்தச் 'சப்தம்' கவர்ந்ததாகத் தெரியவில்லை வியர்வையைத் துடைப்பதும், சாக்குமூட்டைகளை அடுக்குவதும், "லாபம்...இரண்டு" என்று நெல் அளப்பதும்.........வேகமாக நடந்துகொண்டிருந்தது. அவளோ, சப்தம் எழுப்பியவண்ணம், ஆடிக்கொண்டிருந்தாள்.

நெல் அளந்தாயிற்று......

மூட்டைகள் அடுக்கப்பட்டுவிட்டன.........

ஆட்களுக்குக் கூலியும் தரப்பட்டுவிட்டது.........

பிள்ளை குடைவெற்றிலைப்பெட்டி சகிதம், புறப்பட்டும்விட்டார்.......

குமரனோ, விழிகளால் அலமேலுவிடமும் மொழிகளால் அவள் அம்மாளிடமும் பேசிக்கொண்டிருந்தான். 'தம்பி! போகலாமா?' என்ற பிள்ளையின் குரல், கனி சுவைக்கும் போது காவற்காரன் விரட்டியது போலிருந்தது. கடைசிப் பார்வையொன்றை வீசிவிட்டு அவனும் கிளம்பினான்.

டியோ...டியோ...டியோ...

இந்தச் சப்தம், குறைந்தது. தனக்கெதுவும் கிடைக்காததால், ஏமாந்த அந்தக் குறத்தியின் ஆட்டமும் அடங்கிற்று. ஆனால் கண்ணோட்டம் மட்டும் ஓயவில்லை. அஞ்சான் இருக்கிறானே!

"இந்தாபிள்ளெ, நீ போக மாட்டே?" என்று அதட்டினுன், அஞ்சான்.

"போடு, சாமி!" என்று தகரக் குவளையை நீட்டிக்கொண்டே சிரித்தாள் அவள். ஈறெல்லாம் கறுத்து அதன் மத்தியில் ஒளிவிட்ட அந்தப் பற்கள் குப்பைமேட்டிலே கிடக்கும் கிளிஞ்சல்களைப்போலிருந்தன.

இப்போது அதட்டவில்லை, அஞ்சான்.

"ஏம்மே! உனக்கு தர்மம் பண்ணிட்டா, என்ன ஆவறதாம் நான்?"

குறத்தி ஒன்றும் பேசவில்லை. அவள் உதடுகள் சிறிது விரிந்தன; கண்கள் மீன்களைப்போலத் துள்ளின. பச்சைபாசிமணிகளைச் சரிப்படுத்திக்கொண்டாள். தகரக் குவளையை நீட்டினாள். தனக்குக்கிடைத்ததில் ஒரு பகுதி, நெல் மணிகளைக் கொட்டினான்—அஞ்சான். சிரித்தாள்...சிரித்தான். தேன் சிட்டு போல, அடுத்த களம் நோக்கிப் பறந்து சென்றாள், அந்தக் குறத்தி.

## 2

இந்தியாவில் ஏழுலட்சம் கிராமங்களிருக்கின்றனவாமே! அதில் ஒன்றுதான், மாவூர். "இயற்கை அன்னையின் இதயம். இன்பத்தடாகமும் ஏழைகளின் அன்பும், அல்லிப் பூவும், ஆடும்மாடும்... ஆகா! கிராமத்தின் அழகு வருமோ?" என்றெல்லாம், கல்லூரி மேடையில், கர்ஜனை எழுப்ப உபயோகமாகயிருப்பது தான் கிராமங்கள்... என்று எண்ணங்கொண்டிருந்த குமரனுக்கு, இப்போது "கிராமத்திலும் உயிர் இருக்கிறது" என்பது தெரிந்தது. "கவிதைக் கூடே! எழிற் சோலையே! கிள்ளை தாலாட்டும் கிளர்ச்சிக் குகையே!" என்றெல்லாம், எழுதலானான். கிராமத்தைப்பற்றியா, அல்லது அந்த கிராம மோகினியைப் பற்றியா என்பதை அவனைத்தான் கேட்கவேண்டும். காலேஜ்லீவுக்கு ஊருக்கு வந்தால், புத்தகமும் கையுமாகவே காலங்கழிக்கும் அவன், இப்போது மாலையும் காலையும் களத்துக்குச் செல்லத் தவறவில்லை. காரணம் அந்தக் 'காட்டுரோஜா' என்பதைச் சொல்லவா வேண்டும்? கோவிந்தப் பிள்ளை இதைப் புரிந்துகொண்டார். பிள்ளையிடம் இதுபற்றிப் பேசலாமா? 'சிறு பிள்ளை — வயதுவந்த மனம் குரங்குதானே'-இது, அவரது, எண்ணம். ஆகவே, கடிதங்களும், ஜோசியமும் வந்து குவியலாயின, அவரை நோக்கி. அவரது மனைவியும், 'அது இது' என்று சேகரிக்கத் துவங்கிவிட்டார்கள். ஆனால் குமரனோ! 'அங்காடிக்கடை' அம்மா வீட்டுக்குப் போகத் தவறவில்லை.

"தம்பி! நல்லால்லீங்க......ஊரு ஒரு கோடி பேசும். வேண்டாங்க. பெரிய இடத்துப் பிள்ளை. வயிற்றிலே நெருப்டைக் கட்டிக்கிட்டு இருக்கேன். அலமு — சின்னஞ் சிறுசு. அடிக்கடி இபபடி வாராதிங்க ........"

உள்ளத்தில் அலைமோதிய இந்த வார்த்தைகளை ஒரு நாள் உதிர்த்துவிட்டாள், அம்மாளு. கண்ணீரோடு கதவிடுக்கில் நின்றுகொண்டிருந்தாள்—அலமேலு. குமரன் திடுக்கிடவில்லை — அவன்தான் 'முன்னமே' தீர்மானம் செய்துவிட்டானே! "தம்பிதோவிச்சுக்காதீங்க, நேத்து உங்க அப்பாவந்து இங்கே இரைஞ்சாருங்க. குப்பைமேடு கோபுரத்திலே வாழ ஆசைப்படலாங்களா?"

"சரி—அம்மா!" வேகமாக எழுந்து சென்றான், குமரன். அலமுவின் கண்ணீர், அவன் இதயத்தைக் கசக்கிப் பிழிந்தது. வீட்டுக்குள் நுழைந்தபோது கோவிந்தப் பிள்ளை கூச்சல் போட்டுக்கொண்டிருந்தார் 'எங்கே, அந்தக் கழுதை?' என்று. 'இந்தாங்க! பிள்ளையைக் கழுதே கிழுதேன்னு பேசாதீங்க' என்று மறுத்துக்கொண்டிருந்தாள், குமரனின் தாய் குமரன் வந்துகொண்டிருந்தான். கோவிந்தப் பிள்ளை சொன்னார். "பிள்ளையை யாரடி கேட்டா? அவனைக் கேட்டேண்டி! அஞ்சானை. எங்கே போய்ட்டான். நெல் அரைக்கப் போகச் சொன்னேனே? மில்லுக்கு நேரமாயிட்டுதே!"

## 3

"வெள்ளைக்காரன் எவ்வளவோ கெடுதி செஞ்சிருந்தாலும் இந்த நன்மைசெய்ததை மறக்க முடியாதுங்க!"—மாவூர் ரயில்வேஸ்டேஷனைப்பற்றி, அந்த ஊரார் அடிக்கடி, இவ்விதம் பேசிக்கொள்வதுண்டு. 'வெள்ளைக்காரன்' தயவால்ஏற்பட்ட நன்மை எதுவோ நமக்குத் தெரியாது. ஆனால் அந்தஸ்டேஷனைச்சுற்றியிருந்த ஆலமரங்கள், நரித்தொம்பர்களுக்கும், 'பூம், பூம்' மாட்டுக்காரர்களுக்கும் பெரிய 'கோட்டை' யாக மட்டும் இருந்துவந்தது. அறுவடை காலம் வந்துவிட்டால் அந்த இடம்—ஒரு சிற்றூராகிவிடும். நரித்தொம்பர்களின் சிறு குடிசைகள்! புரியாத பஷையில் அவர்கள் போடும், சபதம்! நரிப்பல் — பாசி மணி—"சாமியோ! ஊசி! ஊசி!!" என்கிற ஓலம்!—அந்த இடம், அவ்வூர்ச் சிறுவர்களுக்கு ஓர் 'உல்லாச இடம்.' ஆலமரத்துப்பொந்துகளில் வசிக்கும் பட்சி ஜாதிகளும் அந்தத் தொம்பர்களும் ஒரு விதத்தில் ஒரே இனம் என்று சொல்லலாம். காலையில் பொந்தை விட்டுப் புறப்படும் பறவைகளைப்போலவே, அவர்களும் கிளம்புவார்கள்! இருட்டுக்கு முன் வந்து விடுவார்கள்! — "இருட்டிய பிறகும் வராத குறப் பெண்களை அவர்கள் ஜாதியிலிருந்தும் விலக்கிவிடுவார்கள்" என்று, அந்த ஊர்ப் பெரியவர்கள் பேசிக்கொள்வதுண்டு தைமாதம் — வருவார்கள். பங்குனிக்குள் போய்விடுவார்கள். எங்கிருந்தோ வந்து எங்கேயோ போய்விடும் அந்த நாடோடிகளைப் பற்றி எவரும் அவ்வளவு அக்கரை காட்டமாட்டார்கள். ஆனால் அவர்கள் அடிக்கடி நடத்தும் 'ஒரு விழா' மட்டும் ஊராருக்கு கவனமாயிருக்கும். பலிவிழா! பெரிய எருமையை வெட்டி, அதன் இரத்தத்தைக் குடிப்பார்களாம்! எண்ணெய்ச் சட்டியில் கைவிடுவார்களாம்!—இதைப் பற்றிப் பல 'கதைகள்'—ஊரார் எவரும் அன்று அந்தப் பக்கமே திரும்பமாட்டார்கள்.

பூரண நிலவு காய்ந்து கொண்டிருந்தது. கழுத்திலே போடப்பட்டிருந்த மாலையிலிருந்த தழைகளைத் தின்று, அசைபோட்டுக் கொண்டிருந்தது ஒரு எருமைமாடு.

எவருக்கும் புரியாத பாஷையில் எல்லோரும் கூடிக் கும்மாளம் போட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இரைச்சலால் பயந்த பறவையினங்கள் வேறு 'ஓ! ஓ!' என்று அலறிக்கொண்டு அங்குமிங்கும் பறந்து கொண்டிருந்தன. பயங்கரம் நிரம்பிய இந்த இடத்தின் அமைதி

(11-ம் பக்கம் பார்க்க)

# ★ காலம் கனிகிறது! ★

[தில்லை-வில்லாளன்]

திருவனத்திற்குச் சென்றேன். தித்திக்கும் சேதிகளைத் திரட்டிக் கொண்டு திரும்பினேன். தித்திக்கும் சேதி—ஆமாம், தோழர்களே, நமக்குத் தித்திப்பு தரும் சேதி. ஆனால், அந்த இனிய சேதி, இங்குள்ள சிலருக்கு கசப்பைத்தான் தரும். தித்திப்பு, கசக்கிறதா, இது என்ன விந்தையென்று கேட்காதீர்கள். அவர்கள் ஒருமாதிரி—இனிப்பு, கசக்கும். வெண்மை, கருப்பாகத் தெரியும், வெண்மணல், சர்க்கரையாகக் கூடத் தோன்றும். பாலை, நஞ்சென்பர். வீதி நாயை, வேங்கை யென்று பேசுவர். நிலவோடு, சண்டைக்கு செல்வர். ஆமாம், அவர்களுக்கு உண்மை, பொய்யாகத் தெரியும். பொய்யைச் சுமந்துகொண்டு போருக்குப் போவர். ஏற்கனவே, அவர்கள் அப்படி — அதுவும், இப்போது நிறத்தையே மாற்றிக் காட்டும் கலர்க் கண்ணாடி மாட்டியிருக்கிற தலைவர் வேறு கிடைத்திருக்கிறார். அவரோ, தட்டிக்கொடுத்து, அவிழ்த்து விட்டிருக்கிறார், இப்போது.

அந்தத் திருக்கூட்டத்தார், எத்துறையிலும் நாம் இடம் பெறுவது கண்டு கண்டு நொந்துபோன மனத்தினர்.

எங்கேயும் இடமில்லை யென்று ஏங்கித் தவிப்போர் சேர்ந்து, திக்கற்றோர் திருச்சபை மூலம், நாட்டில் நடமாடி வருகிறார்கள்.

அவர்கள், நம்மைப்பற்றிக் குறை பேசாத நாளில்லை.

காக்கை கருப்பென்று நாம் கூறினால், அவர்கள் வெள்ளை யென்பர். கடல் நீர் உப்பு என்று சொன்னால், சர்க்கரைபோல் இனிக்குமே என்பர், அவர்கள்.

அவர்கள், நாம் திராவிட நாடு, திராவிடருக்கே என்று கூறிடுவதைப் பழித்துப் பேசி வருகின்றனர். திராவிட நாடு, திராவிட நாடு என்று தமிழகத்தில் இருந்து கொண்டு பேசிவிட்டால் போதுமா, ஆந்திரத்தாரின் ஆதரவு உண்டா, கன்னடத்தார் சம்மதம்பெற்றனரா, கேரளத்தார் ஒத்துழைப்பு கிடைத்ததா என்று உரக்கக் கேட்டுவிட்டு, ஒரு சோடாவுடன், தங்கள் மனத்திற்குத் திருப்தி தேடிக்கொண்டிருக்கின்றனர்.

அப்படி அவர்கள் பேசுவதைக் கேட்டு, நாம் வருந்தவுமில்லை—அவர்கள் மீது எரிந்து விழவுமில்லை. நொந்துபோனவர்கள், இதனால் நிம்மதி தேடுகிறார்கள் என்றால், நாம் ஏன் குறுக்கில் நிற்பானேன் என்று சிரித்தபடி யிருந்தோம்.

எதிர் வீட்டில் திருமணம் என்றவுடன், அவனுக்கு வயிற்றெரிச்சல்—தன் வீட்டுப் பெண்ணுக்கு, வரன் கிடைக்காததால் வாடிக் கிடக்கிற அவன், அந்தத் திருமணத்தையே தவறு என்று சொல்லி வந்தான். பெண்ணுக்கு நாகதோஷம், பிள்ளைக்கு ஜாதகக் கோளாறு என்று பேசித் திரிந்தான். திருமணம் நடந்தே தீரும் என்று தெரிந்தவுடன், பந்தலைப் பார், எவ்வளவு சிறியது, மேளம் வைத்திருக்கிறானும், மேளம் இரட்டை மேளம் வைக்கக் கூடாதா என்று பேசினால் வீட்டுக்குடையவன் என்ன செய்வான்—பந்தல்காரனைத் தேடி பந்தணைநல்லூர் போய் நாதஸ்வர நாதமுனியை அழைத்துவர ஆள் அனுப்புவானா! புத்திசாலியாக இருந்தால், தந்திரக்காரன் வீண் செலவு அதிகம் செய்ய வைத்து, பிறகு வீதியில் நிற்க வைக்கப்பார்க்கிறான் என்று புரிந்துகொள்வான்.

அப்படித்தான், திராவிட நாடு கேட்பதே தவறு என்று பேசி வந்த அவர்கள், ஆந்திரம் சென்றாயா, கன்னடத்தாரைக்கலந்தாயா; கேரளத்தாரைக் கேட்டாயா, என்று கேட்கிறார்கள், திருமணமே தீதானது என்று பேசியவன், பந்தல் அகலம் போதாதென்று பேசுவதைப் போல.

அவர்களுக்காக, இந்தச் சேதியைச் சொல்லவில்லை. சொன்னாலும், இதுமட்டும் போதுமா, ஜகதாலப் பிரதாபன் கதையிலே வருவதைப் போலவே, நாகலோகம் சென்று நாகரத்தினம் கொண்டுவா, இந்திரலோகம் சென்று தேவபாரிஜாதம் பறித்து வா என்று கூடப் பேசுவார்கள்;

ஆனால், நம்மிலே சிலர் நினைத்துக் கொண்டிருக்கிறோம், சில சமயங்களில். திராவிட நாட்டுப் பிரச்சினையைப் பற்றி ஆந்திரத்தில் ஏன் பேசக் கூடாது, தெலுங்கிலே தோழர் சி. பி. சிற்றரசு பேசுவாராமே, கன்னடத்தில் போய்ச் சொன்னால் என்ன, சம்பத் அழகாகப் பேசுவாராமே, கன்னடத்தில், கேரளம் விரும்பிக் கேட்கிற முறையில், மலையாளத்தில் மனோகரன் பேசுவாராமே என்று நமக்குள் பேசிக் கொள்வோமல்லவா? அப்பொழுதெல்லாம், நம் பொதுச் செயலாளர், காலங் கனியும், அதுவரை காத்திருப்போம் என்று கூறிடும் வார்த்தைகள் நம் கவனத்திற்கு வந்து, நாம் கடமையைச் செய்து வருகிறோம்.

அந்தக் காலம் வருகிறது — அந்தக் காலக் கனிவை நேரிலே கண்டேன். அந்தச் சேதிதான் தித்திக்கும் சேதியென்று நான் குறிப்பிட்டேன்.

2

கேரளத்தார் கேட்கிறார்கள், இன்று, மிக உரத்த குரலில்—வடநாட்டாதிக்கத்தைப் பார்த்து!

---

## இலங்கை மாநாடு ஒத்திவைப்பு

18—5—52ல் நடைபெறுவதாக இருந்த இலங்கை திராவிட முன்னேற்றக் கழக மாநாடு ஒத்திவைக்கப்பட்டுவிட்டது.

மாநாட்டில் கலந்து கொள்ள விருந்த சி. பி. சிற்றரசு, என். வி. நடராசன், மு. கருணாநிதி, ஆகியோருக்கு, இலங்கை செல்ல அனுமதி தரவில்லை, ஆட்சிபீடம்.

எனவே, மாநாடு, ஒத்திவைக்கப்பட நேர்ந்தது என வரவேற்புக்குழுவினர் அறிவிக்கிறார்கள்.

சுதந்திர கேரளம் வந்தே தீரும் என்று முழங்குகிறார்கள்!

கேரளத்தில் என்ன இல்லை, பின் ஏன் கேரளர் வாடிவதைதயிலண்டும் என்று கேட்கிறார்கள்.

மலையும், காடும் மலிந்த நாடு. வளமான உப்பங்கழிகள், அவைகள் ஓடி வளமாக்கும் வயல் வெளிகள் எங்கும். எப்பக்கம் திரும்பினாலும்.

தென்னை மரங்களின் காட்சி, கமுகுத் தோட்டத்தின் தோற்றம் நம்மைப் பரவசப்படுத்துகிறது, பார்க்கும்பொழுது.

வாழை, பலா, வாயில் நீர் சொட்டச் செய்கிறது, ரயிலில் செல்லும் பொழுது, ஓரங்களில் நின்றபடி,

இதுமட்டுமா, ரப்பர், காபி, தேயிலை, மிளகு, காட்டிலே விளையும் பலவித பொருள்கள் எத்தனை எத்தனையோ.

அணுசக்தி ஆராய்ச்சிக்கு அவசியமான உலோகப் பொருள் கிடைக்கிறது.

கொப்பரைத் தேங்காய் ஏற்றுமதியே, கோடி, கோடி டாலர்களைக் குவிக்கும். மிளகு ஒன்றைக் கொண்டே மேன்மையடையலாமே!

வளமான சோளம் — ஆனாலும் வாடுகிறார்கள் மக்கள்! ஏன்?

இயற்கை வளம் கிடக்கட்டும். தொழில்துறைகள் தோற்றுவிக்க முடியாத இடமா?

தொழில்கள் உண்டு. தொழிலகங்களும் இருக்கின்றன. ஆனாலும் துவண்டுபோகிறார்கள், மலையாள மண்ணிலே பிறந்தும், வாழுவழியில்லாமல்!

நெசவாலைகள், ஓடு செய்யும் தொழிற்சாலைகள், கயிறு திரிக்கும் தொழிலகங்கள், ரப்பர் தொழிற்சாலை, பேப்பர் தொழிற்சாலைகள் உண்டு. ஆனால், அவைகளால் அம் மண்ணுக்குடையவருக்கு வாழ்வில்லை.

ஏற்றுமதி, இறக்குமதி செய்யும் கம்பெனிகள் உண்டு. பல பெயர்களில், பல பொருள்களுக்கு அங்கு ஆதிக்கம் செய்வோர் மலையாளிகளல்ல!

பாங்குகள், இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் — இவைகளை எடுத்துக்கொள்ளுங்கள். அங்கேயும் அந்நியர் பிடிதான்.

இந்த நிலையை எண்ணிப் பார்த்த பிறகுதான், கேரளம் வந்தே தீரும் என்று முழங்குகிறார்கள்.

வளமிருந்தும், அந்த வளத்தின் மூலம், தங்கள் நாட்டு மக்களுக்கு நன்மை செய்துகொள்ள முடியவில்லை. இதற்குக் காரணம், வடக்கிலே அதிகாரங்கள் குவிந்து கிடப்பதுதான். ஏக இந்தியா என்ற பெயரால் நம்மை ஏய்த்து, அவர்கள் வாழ்கிறார்கள். வெள்ளைக்காரர்கள் காலத்தில் லிவர்ப்பூர், மான்செஸ்டர் என்று காட்டி, நம்மைச் சுரண்டியதாகப் பேசிய அதே தலைவர்கள், இன்று பம்பாய், அகமதாபாத்தை ஆக்கிக்கொண்டு சுரண்டுகிறார்கள்.

மார்வாரிகள், குஜராத்திகள் இங்கு படையெடுத்து எங்கும் அவர்களே நிறைந்துவிட்டார்கள்.

மலையாளிகளோ, சொந்த நாட்டில் சுகம் பெற வழியின்றி, சிலோன் செல்கிறார்கள்; மலேயா செல்கிறார்கள்.

சென்ற இடங்களில் மட்டும் சீரும், சிறப்புமாகவா வாழ்கிறார்கள். காபிக் கடைகளில், வேலை!

வந்தவன் வாழ்கிறான் — சொந்த நாட்டுக்காரன் சீரழிகிறான்.

வடக்கிலே, மலையாளிகளைக் கண்டாலே கடுகடுக்கிறார்கள்.

ஆகவே, மார்வாரிகள், குஜராத்திகள் ஆதிக்கம் ஒழிக என்ற குரல், மார்வாரி, குஜராத்திகள் ஆதிக்கம் தான் காங்கிரஸ், அந்த காங்கிரஸ் கட்சியின் கையிலேதான் இந்தியா இருக்கிறது என்பதால் வடநாட்டாதிக்கம் ஒழிக என்று ஒலிக்கிறது.

வடநாட்டு ஆதிக்கத்தை எதிர்த்துப் போர் முரசு கொட்டத் தொடங்கிவிட்டார்கள்.

## 3

கேரள சுதந்திரக் குடியாட்சியமைப்பதையே இலட்சியமாகக் கொண்டு, இன்று இயங்கிவருகிறது கேரள சோஷலிஸ்ட் கட்சி.

அக்கட்சியார், தங்கள் இலட்சியத்தைப்பற்றி மற்ற முற்போக்குக் கட்சிக்காரர்கள் என்ன கருதுகிறார்கள் என்று அறிய 18-5-52-ல் திருவனந்தபுரத்தில் ஒரு மாநாடு கூட்டினார்கள்.

அதற்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒரு பிரதிநிதியனுப்பி வைக்கும்படி கேட்டிருந்தார்கள்.

கழகத்தின் பிரதிநிதியாக நான் சென்றிருந்தேன்.

கேரளத்தில் நாம் பணியாற்றவில்லை யென்று சொல்கிறார்களே, அவர்களுக்கு நம் கிளைகள், திருவனந்தபுரம், பலராமபுரம், பாலக்காடு, எர்ணாகுளம், மூணார், மன்னார், ஏர்வாடி போன்ற இடங்களில் இருக்கின்றன என்று மகிழ்ச்சியுடன் சொல்லிக்கொள்கிறேன்.

17-5-52 இரவு 8 மணிக்கு திருவனந்தபுரம் சென்றேன். பத்து மணிக்கெல்லாம், மாநாட்டின் அமைப்பாளர் பாஸ்கரன் நாயர் என்னைக் கண்டு பேசினார்.

நம் திராவிடநாட்டுப் பிரச்சினை பற்றிய சந்தேகங்கள் பல கேட்டார். விளக்கினேன். கேரள சுதந்

---

### திருத்தம்

20—4—52-ல் திராவிடநாடு இதழில், வெளியிடப்பட்டுள்ள தி. மு. கழக மாநில மாநாட்டு நன்கொடை வரவுக்கணக்கில் ரங்கோன் ரூ 150 என்பதை, இலங்கை, தோழர் குலசேகரன் மூலம் வரவு ரூ 175 என்று திருத்திப்படியுங்கள்.

---


வாசித்தீர்களா!

### திருக்குறள்-குழந்தை உரை

திருத்தி, உருவாக்கி உறுதியாகப் பைண்ட் செய்த அழகிய மூவர்ண ஆர்ட் முகப்புடன் கூடிய இரண்டாம் பதிப்பு விற்பனையாகிறது.

மலிவுப்பதிப்பு ரூ. 4—0—0

பரிசு பதிப்பு ரூ. 5—0—0

முன்பணம் அனுப்புகிறவர்களுக்குத் தபால் செலவில்லை. விற்பனையாளர்களுக்குத் தக்க கழிவுண்டு.

தேவைக்கு:—

சிவலிங்கம் நூற்பதிப்புக் கழகம்,
ஈரோடு.

...ர உணர்ச்சியூற்றிய வரலாற்றையே சுருங்கிய முறையில் எடுத்துக் கூறி னர். பிறகு இரவு பதினொன்றரைக் கெல்லாம் விடைபெற்றுச் சென் றார்கள்.

திருவனந்தபுரம் நான் சென்று இறங்கிய சில நிமிடங்களிலே, கழ கத் தோழர்கள் என்னைச் சூழ்ந்து கொண்டார்கள்.

மறுநாள் தோழர்களுடன் மாநாடு நடந்த அழகப்பா மண்டபத்திற்குச் சென்றிருந்தேன். அங்கு, கருத் துரை வழங்க பல கட்சித் தோழர் கள் வந்திருந்தார்கள்.

வாதங்கள் மலையாளம், தமிழ், இடையிடையே ஆங்கிலம் கலந்து நடந்தன.

இதில் கம்யூனிஸ்ட்கட்சி, புரட்சி கர சோஷலிஸ்ட்கட்சி, திராவிட கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், தனிப்பட்டோர் என்று பலவித சார்பில் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

காலை பதினொன்றரைக்குத் தொடங்கியது, மாலை ஐந்துமணி வரை (அரைமணி நேர இடை வேளை) நடந்தது

திராவிட முன்னேற்றக் கழகம், ஆந்திரம், சேரளம், கன்னடம், தமி ழகம் ஆகியவை சுதந்திரக் குடியாட் சிகளாகி, இவை நான்கும் கூட் டாட்சியாக அமையும் திராவிட நாட்டை யமைப்பதையே குறிக் கோளாகக் கொண்டது. இப் பொழுது கேரளம் சுதந்திர சமதர் மக் குடியாசாகிறது என்றால், தி. மு. க. வின் சார்பாக வேலை பூர்த்தி யாகிறது என்று அர்த்தம், ஆகவே, கேரளம், வடவர் பிடியிலிருந்து விலகி சுதந்திரமாக வாழ்வதை தி. மு. க. வரவேற்கிறது. அதற்காக ஒத்துழைக்கத் தயாராக இருக்கி றது என்று குறிப்பிட்டு விட்டு ஆனால் அப்படி அமையும் கேரளம், தி. மு. கழகம் சொல்லும் திராவிட நாட்டில் இடம்பெறுமா என்பதைத் தெளிவு படுத்த வேண்டும் என்று கேட்டேன். இது சம்மந்தமாக கேரள சோஷலிஸ்ட் கட்சித் தலை வர்கள், தி. மு. க. பொதுச் செய லாளரைக் கண்டு பேசுவது நல்லது என்ற கருத்து வரவேற்கப்பட்டது. சுதந்திர கேரளம் அமைப்பது பற் றிய தீர்மானம் நிறைவேற்றப் பட் டது. (தீர்மானச்சுருக்கம் வேறொரு பக்கத்தில்)

அன்று மாலை பழவக்காடு மைதா னத்தில் நடந்த அவர்கள் கூட்டத் தில், நம் கருத்தைத் தெரிவித்தேன்

4

கேரள சோஷலிஸ்ட் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரைச் சந்தித் துப் பேசினேன். பேசியவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள், ஜான்மஞ் சூரியன், எம். பி. மேனன், சதானந்த சாஸ்திரி எம். எல் ஏ., பாஸ்கரன் நாயர், விவேதாநந்தன், தங்கப்ப நாயர், சுகுமார்.

இவர்கள் வடநாட்டு எதிர்ப்புப் போராட்டங்களில் நம்முடன் தோளோடு தோளிணைய் இருந்து பணியாற்ற ஒப்புக் கொள்கிறார்கள். அதன் அறிகுறியாக, இந்தி எதிர்ப் புப்போர் தொடங்கி நடத்த, மாநாட் டிலேயே தீர்மானம் போட்டிருக் கிறார்கள்.

அடுத்த திங்களில் தி. மு. க. பொதுச் செயலாளரை வந்துசந்திப் பதாக அறிவித்து, அதற்கான முயற் சிகளை என்னை எடுத்துக்கொள்ளும் படியும் கேட்டுக் கொண்டுள்ளார் கள்.

காலம் கனிந்து வருகிறது என் பது இப்பொழுது புரியும் என்று கருதுகிறேன்.

திருவனந்தபுரத்தில் நம் கழகத் தோழர்கள் பலர் உளர், மலையாளத் தில் எழுதவும், பேசவும் தெரிந்த வர்கள்! அவர்கள் கேரளத்திலும் நம் குரல் ஒலிக்கத் தொடங்கிவிட்டது என்பதை தமிழகத்தில் சொல்லுங் கள் என்று ஆர்வத்தோடு வழிய னுப்பியதை என்னால் மறக்க முடி யாது

தோழர் ஏ. கிருஷ்ணன், வயதா னாலும், இலட்சிய வெறியோடு உலவும் நல்லசாமி ஆகியோரையும், மற்றும் பல தோழர்களையும். இதனை எழுதிக்கொண்டிருக்கும் பொழுதே என்னால் நினைக்காமல் இருக்கமுடிய வில்லை. அவர்களுக்கு நன்றி செலுத் திக் கொள்கிறேன். கேரளத் தோழர் கள், இலட்சியத்தைப் புரிந்து கொள்ளும் முறையில் பணியாற்றுங் கள் என்று தமிழகம் கேட்டுக்கொள் கிறது அவர்களை!

★

## செங்கற்பட்டு மாவட்ட பிரசாரப் பயிற்சி வகுப்பு

—

### மே. 27, 28, 29, 30-ல்

வாலாஜாபாத் அருகிலுள்ள கட்ட வாக்கம் கிராமத்தில் நடைபெறும்.

செங்கற்பட்டு மாவட்ட பிரசா ரப் பயிற்சி வகுப்பு 1952-மே திங் கள் 27, 28, 29, 30 ஆகியநாட்களில் வாலாஜாபாத் அருகிலுள்ள கட்ட வாக்கம் கிராமத்தில் நடத்த ஏற் பாடுகள் செய்யப்பட்டு வருகின் றன.

வாலாஜாபாத் தோழர் W. K. தேவராசன் அவர்கள், இதற்கான பொறுப்புகளை ஏற்றுக் கொண்டுள் ளார்.

பயிற்சிவகுப்பில், மாணவர்களும் கழகப்பணியாளர்களும் பங்குபெற லாம் ஆனால், பயிற்சியாளர்சேர்ப்பில் மாணவர்களுக்கே முதன்மையும், முக்கியத்துவமும் அளிக்கப்படும். பயிற்சி வகுப்பில் செங்கற்பட்டு மாவட்டத்தினர் மட்டுமே கலந்து கொள்ளலாம்.

பயிற்சி வகுப்பில் சேருவோர் முன்பே மேடையேறிப் பேசும் பழக்கமுடையவராகவும், பயிற்சி மட்டுமே பெறவேண்டியவராகவும் இருக்கவேண்டும்.

வகுப்பில்சேரவிரும்புவோர்அவர் பேச்சாளர் என்பதற்கு அந்தந்த ஊர்க்கிளைக் கழகச் செயலாளரின் கையொப்பத்துடன், தங்கள் விண் ணப்பத் தாள்களை, சி. வி. எம். அண்ணாமலை, மாவட்ட செயலாளர், மாவட்ட தி. மு. க. காஞ்சிபுரம் முகவரிக்கு 25—5—52-க்குள் அனுப்பிவைக்க வேண்டுகிறோம். பயிற்சி வகுப்புக்குத் தெரிந்தெடுக் கப்பட்டவர்களுக்கு அழைப்புகள் அனுப்பப்படும் அழைப்புப் பெற்ற வர்கள் வழிப் பயணச் செலவை அவர்களே ஏற்றுக் கொள்ள வேண் டும்.

வரும்பொழுது படுக்கை வசதி யுடன் வரவேண்டும். நான்கு நாட் களுக்கும் உணவு, தங்க வசதி மட்டுமே செய்து தரப்படும்.

சி. வி. எம். அண்ணாமலை
செயலாளர்
செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க.

# திராவிடநாடு

காஞ்சி] 25—5—52 [ஞாயிறு


## ஆசிரியர் குறை தீர!

★

பள்ளி ஆசிரியர்கள், மனித வாழ்வின், படிக்கட்டுகள்! ஆனால், அவர்களோ, விழியில் நீரோடு, வேதனைப்படும் நிலையிலிருக்கின்றனர். 'மனிதர்களை' தயார் செய்யும், அவர்கள் வாழ்க்கை, வறண்ட பாலையாகவே இருந்துவருகிறது—குடும்பத்தை நடத்திச் செல்ல போதிய வருவாயின்றி, அவர்கள் படும் அல்லல் கொஞ்சநஞ்சமல்ல.

இந்நிலையை கடந்த வாரம் கோவை மாநகரில் கூடிய சென்னை மாநில கல்வி மாநாடு, நன்கு சுட்டிக்காட்டியிருப்பதோடு, 'பள்ளி ஆசிரியர்களின் சம்பளங்களை உயர்த்த சர்க்கார் தயங்கக்கூடாது' என்றும் வலியுறுத்தியிருக்கிறது.

எத்தனையோ முறைகள் இது போலத் தத்தம் குறைகளை, அவர்கள் தெரிவித்தும், இன்றைய அரசாங்கம் அதுகுறித்து, போதிய கவனம் செலுத்தவில்லை.

பலப்பல உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள் — நூற்றுக்கணக்கிலும் ஆயிரக்கணக்கிலும் சம்பளம் பெற்றுக் கொண்டு. அவர்களுக்கு சமுதாயத்திலும் அரசாங்கத்திலும் இருக்கும் செல்வாக்கும் அதிகாரமும் ஏராளம்!

ஆனால், அத்தகைய 'பெரியவர்களை' ஆக்கித்தரும் ஆசிரியர்களோ, எப்போதும்போல் 'ஈசனே, சிவகாமி நேசனே!' என்று பாடியவண்ணம், பிரம்பையும், கரும்பலகையையுமே நம்பிய வண்ணம் காலங் கழிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்—பள்ளியின் 'காம்பவுண்டு'க்கு அப்பால்அவர்களுக்கெனஎவ்வித அதிகாரமோ செல்வாக்கோ இல்லை!

இவ்வித நிலை, அவர்களுடையது. போதிய சம்பளம் கிடையாது—பல இடங்களில் 'பிரைவேட்' சொல்லிக் கொடுத்து அதன் மூலம் ஐந்து பத்தைக்கொண்டு, வீட்டுக்கு ஏற்படும் தொல்லைகளை அடைக்கலாமென்றாலும், அனுமதி கிடையாது அவர்களுக்கு.

இவ்வித அல்லல்களுடன்நிற்கும் ஆசிரியப்பெருந்தகையாளர்களுக்கு போதிய சம்பளம் தரும்படியான விதிமுறைகளை, ஆளவந்தார் நிர்ணயிக்கவேண்டியது மிக மிக அவசியம். ஒரேமாதிரியான சம்பளமுறையும் அவர்களுக்கு இருக்கவேண்டும். தனிப்பட்ட நிர்வாகிகளைக் கொண்ட இடத்தில் ஒன்று,மாவட்டப்பள்ளியில் வேறு ஒருமாதிரி என்கிற நிலை இல்லாது, எல்லோருக்கும் அவரவர் தரத்துக்கு தக்கவாறு, சம்பளமுறைமாற்றி யமைக்கப்படவேண்டும்.

இந்த அவசியமான காரியத்தை, சென்னை அரசியலார் செய்ய, 'வழக்கம்போல்' காலங்கடத்தமாட்டார்கள் என நம்புகிறோம்.

❁

---

## அவசர வேண்டுகோள்

கிளைக் கழக வீரர்களே!

மாவட்டக் கழகத்தினரே!

கழகத் தோழர்களே!

உறுப்பினர் சேர்க்கும் பணியின் கடைசிநாள் ஜூன் 15, என்று பொதுக்குழு முடிவு செய்ததை அறிவீர்கள். தேதி நெருங்கிக்கொண்டிருக்கிறது. வேலைகள் நிறைய இருக்கின்றன. உடனடியாக உறுப்பினர் சேர்க்கும் வேலை, முடிவாகவேண்டும். இலட்சியக் கோட்டையின் 'பலம்' உறுப்பினர் எண்ணிக்கைதான்! வேக வேகமாகச் சேருங்கள். விரைவில் முடியுங்கள். பல இடங்களில், கழகக் கிளைகள், ஆர்வத்தோடு ஒவ்வொரு தெருவாகப் போய்ச் சேர்ப்பதாக அறிகிறோம். நல்லமுயற்சி, உடனடியாக இந்தப் பணி முடிவாகவேண்டும். இது வேலையில், எல்லோரும், முயற்சி யெடுக்குமாறு கோருகிறோம். அப்போதைக்கப்போது,எம்முடன், கடிதத் தொடர்பு பெற கேட்டுக்கொள்கிறோம்.

உடனடி வேலை. உடனேமுடிக்க வேண்டிய வேலை.

**ஈ. வெ. கி. சம்பத்,**
பொறுப்பாளர்,

தி. மு. க. தலைமை நிலையம்,
**"அறிவகம்"**
24, சூரியநாராயணசெட்டி தெரு
ராயபுரம், சென்னை.

★


## வெளி வந்துவிட்டன!

சிந்தனைக்கு விருந்தளிக்கும் மிகச் சிறந்த நூல்கள்.

★

இரண்டாம் பதிப்பாக, மிக அழகாகவும் கண்கவரும் முறையிலும் வெளிவந்துள்ளன.

★

C. N அண்ணாதுரை M. A தீட்டி, நாட்டுக்குத் தரும் நல் ஏடுகள்

★

| | |
|---|---|
| **ஜபமாலை** | 0—8—0 |
| **சாது** | 0—8—0 |

★

புது நூல்

| | |
|---|---|
| **மக்கள் தீர்ப்பு** | 0—8— |

★

விற்பனைக் கழிவு 250/0-தபா செலவு தனி. நூல்கள் பெற விரும்புவோர், கழிவை நீக்கி முன் பணமாக அனுப்பினால்மட்டுமே, நூல்கள் அனுப்பிவைக்கப்படும். தனிப்பட்ட புத்தகங்கள் வேண்டுவோர், புத்தக விலையோடு, அஞ்சல் செலவிற்கும் சேர்த்து தபால் தலைகள் அனுப்புக.

விபரங்களுக்கு:-

**பரிமளம் பதிப்பகம்,**
17, B. வரதுவாசல் தெரு,
காஞ்சிபுரம்.

# கேரளம் கேட்கிறது

திருவனந்தபுரத்தில், 18—5—52ல் நடந்த கேரள சோஷலிஸ்ட் கட்சி மாநாட்டுத் தீர்மானத்தைக் கீழே தந்துள்ளோம். வடவாதிக்கத்தின் கொடுமையை நாம்மட்டுமே எடுத்துக்கூறுவதாகவும், வடநாட்டுப் பிடியிலிருந்து நாம்மட்டுமே பிரிந்துவிடவேண்டும் என்று பேசுவதாகவும் சிலர் பிதற்றித் திரிகிறார்களே, அவர்களுக்கு இதனை அன்புப் படையலாக்குகிறோம். தமிழகம்மட்டுமல்ல, கேரளமும் போர்முரசு கொட்டுகிறது. அந்த முரசொலிதான் கீழ்வரும் தீர்மானமாகும். மலையாளத்தில் எழுதப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் தமிழ்க் கருத்துரைதான் இது.

பிரிவினை திட்டத்திற்குட்பட்டு சுதந்திர தேசீய அரசு நிறுவ பல யாளிகளின் ஒத்துழைப்பு இன்று இருக்கிறது. சுயநிர்ணய உரிமையுள்ள கேரளத்தை உருவாக்குவதற்காக இடதுசாரி ஐக்கிய முன்னணி தலைமை தாங்குமென்பது தெளிவு. சுயஉரிமை படைத்த கேரளம் சுதந்திர கேரளமேயாகும். கேரளரான நம்மைப் பொறுத்தவரையில் சுதந்திர கேரளம் நிச்சயமாக நிறுவப்படவேண்டும்.

கேரளத்தின் பரிதாபச் சித்திரம் :

வேலையில்லாமை, உணவு நெருக்கடி இவைகளினால் கேரளத்தின் பொருளாதார நிலை சீர்குலைந்து கிடக்கிறது. கைத்தொழில்கள் இல்லாததினால் வேலையில்லாமை பெருகுகிறது உழைக்கும் பாட்டாளிக்கு வேலை செய்ய இடமில்லாததினால் உணவுப்பொருள்கள் பெருகுவதில்லை. இங்குள்ள ஆதாயம் தரும் பொருள்கள் அனைத்தும் வெளிநாடுகளுக்குக் கொண்டு செல்லப்படுகிறது. உணவுப் பொருள்களின் இறக்குமதி குறைந்ததால் நாடு பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது. உபயோகமற்ற கல்விமுறைதான் இங்குள்ளது. நாட்டு மக்களுக்கு நன்மையைக்கொடுக்காத வடநாட்டு காங்கிரசாட்சி நாட்டை நாசப் பாதைக்கு அழைத்துச் செல்கிறது. தாழ்நிலைக்கு இழுத்துச் செல்லப்படும் பாட்டாளியின் துன்பங்கள் பெருகிக்கொண்டே போகின்றன.

பரிதாபகரமான ஆட்சியால் பரதவிக்கிறது, கேரளம்—இயற்கை வளம் நிறைந்த கேரளத்தின் இன்பமயமான வாழ்விற்கு ஏங்கி நிற்கும் மலையாள மக்கள் வடவரின் அநியாயச் சட்டங்களினால் அவதிபடுகிறார்கள். இங்குள்ள மிளகு, தேயிலை, ஏலம், ரப்பர் முதலிய பொருள்களுக்கு ஏற்றவிலை தரப்படவில்லை. நம்மை ஆளும் வடநாட்டு காங்கிரஸ் முதலாளிவர்க்கம் இந்த செய்கைக்கு ஒத்துழைக்கிறது. வடநாட்டு சர்க்கார் நம்மிடமிருந்து வரியென்ற பெயரால் பணத்தை வாங்கிக் குவிக்கிறது.

தொழில் வளர்ச்சி தடைப்படுகிறது :

கேரளம் தொழில் துறையில் அவ்வளவாக முன்னேறவில்லை. இங்கு தொழில் உணர்ச்சிக்கான முயற்சிகள் செய்யப்படவில்லை. நேர்மாறாக தொழில் வளர்ச்சியை தடை செய்வதற்கான முயற்சிகள் செய்யப்படுகின்றன. மலபார், திருவிதாங்கூரின் மலைநாடுகளிலவிளையும் ரப்பர், தேயிலை போன்ற பொருள்கள் அத்தனையும் அந்நிய நாட்டு முதலாளிகளுக்குச் சொந்தமாயிருக்கிறது. இங்குள்ள மக்களின் சுதந்திர உணர்ச்சியை அழித்து, தங்களின் ஆதிக்கத்தை ஸ்தாபித்துவருகிறார்கள், அவர்கள். அந்நிய நாட்டு முதலாளிகளின் பாதம் தாங்கிக்கிடக்கும் நம் நாட்டு முதலாளிகள் இந்நாட்டின் அரசியல் அதிகாரத்தை வடநாடு முதலாளித்துவத்திற்கு காணிக்கையாக்கியிருக்கிறார்கள்.

தேசிய உணர்ச்சி வளருகிறது :

எல்லா தேசிய நாடுகளிலும் சுதந்திர உணர்ச்சி பொங்கிடுவதுபோல கேரளத்திலும் பொங்கிவழிகிறது. சமீபத்தில் நிகழ்ந்து முடிந்த தேர்தல் இந்த உண்மையை விளக்குகிறது. தென்னிந்தியாவில் — குறிப்பாக தமிழகத்தில் வடஇந்திய ஆதிக்கத்திற்கு எதிராக எழுப்பப்படும்சுதந்திர கீதத்தை நல்லவழியில் பயன்படுத்தினால் தேசிய அரசுகளின் முன்னேற்றத்திற்கு அது மிகவும் உதவும்.

நாடுகளின் சுயநிர்ணய உரிமை :

தேசீய சுயநிர்ணய உரிமையைத் தடை செய்வது வல்லரசு வாதமாகும். வல்லரசுகளின் பகையினால்தான் சுயநிர்ணய உரிமைக் குரல் எழும்பமுடியும். தேசிய பிரச்சினைக்கு பரிகாரம் கண்டால்தான் இந்தியப்புரட்சி வெற்றி பெறும். ஒரு நாட்டின் சுதந்திர உணர்ச்சியை அழித்து, அதன்மேல் மற்றொரு நாடு ஆதிக்கம் புரிவதுதான் தேசீயபிரச்சினை. தேசீயநாடுகளின் உரிமை வாதங்களை ஏற்றுக்கொள்வதுதான் இதற்குப் பரிகாரம். சுயநிர்ணய உரிமைப் பேச்சை நாடுகளின் பிரிவினையினால் செயலாக்க வேண்டும். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வருகிறது. இந்திய முதலாளித்துவம். முளையிலேயே அதன் வளர்ச்சி தடை செய்யப்பட்டது. 1947 ஆகஸ்ட் 15-ந்தேதி முதல் முதலாளித்துவம் மக்களைப்படுகுழியில் தள்ளியது. —

## வரப்பெற்றோம்

நமது கடவுள்கள்

'திராவிடன்' ஆசிரியரும் நமது முன்னணி வீரருமான தோழர் என். வி. நடராசன் அவர்கள் தீட்டியுள்ள இந்நூலில், சமுதாய எழுச்சியும் அதைத் தடுக்கும் மூடநம்பிக்கைகளையும் விளக்கிக் காட்டியுள்ளார். இளைஞருலகு படித்துணர வேண்டிய நூல். விலை 4 அணா.

வஞ்சகவலை

தோழர் என். வி. கலைமணி தீட்டியுள்ள இந்நூலில், வஞ்சகவலை விரித்து வாழ்வோரைப் பற்றி விளக்கங்கள், பலமேற்கோள்களுடன் தரப்பட்டிருக்கின்றன. சிறந்த முயற்சி நல்ல கருத்துக்கோவை. விலை 12 அணா.

இந்நூல்கள் கிடைக்குமிடம்:—

**பாண்டியன் பதிப்பகம்,**
18, பெருமாள்முதலிதெரு,
கொண்டித்தோப்பு சென்னை-1

### சோஷலிஸப் புரட்சிக்கு :

ஜனநாயகப் புரட்சி வளர்ந்து, சமதர்மப் புரட்சியாக மாறும். அதன் முக்கியமான காரணம் தேசிய தத்துவமேயாகும். தேசிய நாட்டை சமதர்மக் குடியரசாக்குவதே தொழிலாளிகளின் கடமையாகும். தேசீயப்புரட்சி உருவாகும்போது மலையாளிகளாகிய நமது கடமை கேரளத்தை ஒரு சுதந்திர சமதர்ம அரசாக மாற்றுவதேயாகும். கேரளத்தின் ஒன்றுபட்ட தொழிலாள இனம் சுதந்திர கேரளத்திற்காக-புரட்சி செய்யவேண்டும்.

### பூர்ஷ்வாக்களின் இந்திய 'தேசீய தத்துவம்':

விசித்திரமான தேசீய உணர்ச்சியை இந்திய மக்களுக்கு ஊட்டியிருக்கிறது, வடஆதிபத்தியம். குஜராத்தி, மார்வாடிகளின் வஞ்சக வலைக்குள் இந்திய மக்களை வீழ்த்துவதற்கான ஒரு தந்திரமேயாகும் இது. ஒரு மக்கள் சமுதாயத்தின் முன்னேற்றம் வளர்ந்துவரும் அவர்கள் மொழியும், கலாசாரமுமாகும். கேரளத்தில் தேசியமாகிய அஸ்திவாரத்தில் மலையாளியின், ஒரு உன்னத கலாசாரம் வளர்த்த மலையாளம் சுதந்திரமாயிருக்கவேண்டும். அந்நிய மொழியின் ஆதிக்கம் தடைசெய்யப்படவேண்டும். இந்தி மொழி இந்நாட்டு மாணவர்களுக்கு கட்டாய பாடமாக ஆக்கப்பட்டிருக்கிறது. ஆங்கில ஆதிக்கம் ஆங்கிலமொழியைத் திணித்ததைப்போலத்தான் இதுவும்!

### அரசியல் சட்டத்தை மாற்றவேண்டும்:

குஜராத்தி, மார்வாடி முதலாளித்துவ திட்டம்தான் இந்திய அரசியல் திட்டம். அந்தத் திட்டம் சிறிய நாடுகளின் கோரிக்கைகளைகவனிப்பதில்லை. அதிகாரங்களை அவிழ்த்துவிடும் சட்டத்தின் கொடுமை தீர்க்கப்படவேண்டும். ஆதலால் கேரள மக்களாகிய நாம் இந்த ஆட்சியின் மேலுள்ள அதிருப்தியை வெளிப்படுத்தவேண்டும். நமக்காக நாமே ஓர் அரசியல் சட்டத்தை வகுக்க வேண்டும்.

### லோக சாம்ராஜ்யம் அழிகிறது

வல்லரசு விநோதம் நமது குரலுக்கு உதவி செய்யும்போது, உலகெங்கும் வல்லரசு தத்துவத்திற்கு கிடைத்துக் கொண்டிருக்கும் கண்டனங்கள் நமது பார்வையில் படுகிறது. வியட்நாமிலும், இந்தோசீனாவிலும், இச்சாம்ராஜ்ய சக்தி தகர்ந்து விட்டது. அதே போல்தான் ஈரானிலும், எஜிப்டிலும் இந்தோனேஷியாவில் சாம்ராஜ்ய வெறுப்பு மனப்பான்மை இந்தியாவைப்போல புதுவடிவெடுத்து வருகிறது. மலாயா போன்ற நாடுகளில் சாம்ராஜ்ய தத்துவத்திற்கு நிலையில்லாமலாகிவிட்டது., கோல்ட் கோஸ்டிலிருக்கும் டூனிஷ்யாவும், மேற்கூறியவைகளில் ஒன்றாகும்.

(1) கேரளத்தின் ஜமீன்களும், முதலாளிகளும் ஒரே நிறையிலுள்ளவர்களாகும். ஆதலால் இவர்கள் தலைமை முதலாளித்துவத்திற்கு அடிபணிந்து வாழ்கிறார்கள். அவர்கள் சுதந்திர கேரள கோரிக்கைக்காரர்களின் எதிரிகளாகும். கேரளத்தை விமோசனப் புரட்சியை தங்களாலியன்ற வரையிலும் எதிர்க்க இருக்கிறார்கள்.

(2) சுதந்திர கேரளப் புரட்சியைப் பட்டாளிகளே நடத்த வேண்டும். தவறின்றி, புரட்சி உணர்ச்சியோடு பாட்டாளி இனம் அதன் கடமையைச் செய்யும்.

மேலும், சுதந்திர கேரளம் அமைவதற்கும், அதற்கு நல்லாட்சி அமைப்பதற்கும் எட்டு திட்டங்களைத் தெரிவித்து, எல்லா முற்போக்கு சக்திகளையும், கேரள சுதந்திரத்திற்கான போராட்டங்களில் ஒத்துழைக்கும்படி வேண்டுவதோடு தீர்மானம் முடிகிறது.

★

---

## தலைமை நிலைய வெளியீடுகள்

| | |
|---|---|
| சட்டதிட்டம் | 0—2—0 |
| தீர்மானங்கள் | 0—1—0 |

கிளைக்கழகத் தோழர்களே,

மொத்தமாக நூற்களைப் பெற்று, உங்கள் ஊர்களில் தோழர்களுக்குத் தாருங்கள். நம் தீர்மானங்களைத் தெரிவியுங்கள். தெளிவற்றவர்களுக்கு விளக்குங்கள். கழகத்தில் சேர மனங்கொண்டவர்களுக்குச் சட்டதிட்டத்தைக் காட்டுங்கள்.

விவரங்களுக்கு:—

பொறுப்பாளர்,
தி. மு. க. தலைமை நிலையம்,
ராயபுரம், சென்னை 3.

---

## கோவை மாவட்ட பிரச்சாரப் பயிற்சி வகுப்பு

### மே 29, 30, 31, ஜுன் 1-ல் கணியூரில் நடை பெறும்

கோவை மாவட்ட பிரச்சாரப் பயிற்சி வகுப்பு 1952 மே திங்கள் 29, 30, 31, ஜுன் 1 நாட்களில் கணியூரில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. தோழர் K. A. முருகேசன் அவர்கள் அதற்கான ஏற்பாடுகள் செய்ய இசைந்துள்ளார்.

பயிற்சி வகுப்பில் கோவைமாவட்டத்தினர் மட்டுமே கலந்துகொள்ள வேண்டும். பயிற்சி வகுப்பில் சேர்ந்து கொள்ள மாணவர்களுக்கும், கழக ஊழியர்களுக்குமட்டுமே முதன்மையும், முக்கியத்துவமும் அளிக்கப்படும்.

பயிற்சி வகுப்பில் சேருவோர் கழக உறுப்பினராகவும், முன்பே மேடைஏறிப் பேசிப்பழக்கப்பட்டவராகவும், பயிற்சி மட்டுமே பெற வேண்டியவராகவும் இருக்க வேண்டும்.

வகுப்பில் சேர விரும்புவோர் அவர் பேச்சாளர் என்பதற்கு அந்த ஊர் கிளைக் கழகச் செயலாளர் கையொப்பத்துடன் விண்ணப்பத்தாள்களை கீழ்க்கண்ட முகவரிக்கு 23—5—52 வியாழக்கிழமைக்குள் அனுப்பவேண்டும். வழிச் செலவு அவரவர்கள் பொறுப்பு. இடவசதி, சாப்பாடு வசதி செய்துதரப்படும்.

விண்ணப்பத்துடன் போதிய (பதில் எழுத) தபால் தலை வைத்தனுப்பவேண்டும்.

சே. அ, ராசமாணிக்கம்,
செயலாளர்,
கோவை மாவட்ட தி. மு. க.
11/47, தெப்பக்குளம் வீதி,
கோயமுத்தூர்.

# கதரோ, கதர்!

"நமஸ்தே—பண்டிட்ஜீ. ஒரு சிக்கலான பிரச்னை."

"எங்கே?—எங்கே!"

"நமக்குள்தான்"

"மாகாணக் கமிட்டியிலா—மத்பக் கமிட்டியிலா?"

"இல்லை பண்டிட்ஜி! பார்லிமெண்ட் மெம்பர்களுக்குள்"

"என்ன? என்ன! போட்டி வந்துவிட்டதோ—"

"அதுதான் ஒருமாதிரியா முடிந்துவிட்டதே..."

"பிறகென்ன பிரச்னை?"

"நாமெல்லாம் காங்கிரஸ்காரர்கள் தானே..."

"சந்தேகம் எனன இதில்? யார் கேட்டது......கம்யூனிஸ்டா, சுயேச்சையாளர்களா..."

"வேறு ஒருவருமல்ல பண்டிட்ஜி! நமக்கே சந்தேகம் வந்துவிட்டது..."

"நமக்கு நமக்கு என்றால் என்ன ஐயா அர்த்தம்? யாருக்கு சந்தேகம்—உமக்கா — அல்லது வேறு யாருக்காவதா?"

"எனக்கே என்றுதான் வைத்துக் கொள்ளுங்களேன்"

"என்ன சந்தேகம்?"

"நாம் எல்லாம் காங்கிரஸ்காரர்கள் தானே"

"ஆமாம்!"

"இங்கே வந்து பாருங்கள் என்ன நடக்கிறதென்று?"

* * *

கோபாவேசத்தோடும், நெறித்த புருவத்தோடும், வேக வேகமாகச் செல்கிறார் பண்டிட்ஜீ! காங்கிரஸ் பார்லிமெண்டரி கட்சி அறை. பலர் 'முடியாது' என்று கூச்சல் போடுகிறார்கள். வேறு பலர், எங்களால் முடியாது!' என்று கூவுகிறார்கள். சந்தைக் கடை சப்தம்! காதை மூடிக்கொண்டு — கத்துகிறார்.

"பண்டிட்ஜி! பண்டிட்ஜி!!" என்கிற, குரல், எங்கும். 'பண்டிட் நேருக் கூ.......' என்று வேறு சிலர் கூவுகிறார்கள். பழைய ராஜாதி ராஜ மார்த்தாண்ட பூபதி போல், மிடுக்கோடு, நுழைகிறார்! 'என்ன இங்கே தகராறு?' என்று, கொஞ்சம் கோபத்தோடு கேட்கிறார்.

'இப்படி யெல்லாம் சண்டை போட்டுக்கொண்டால்...' என்று ஆரம்பித்து, காங்கிரஸ் கட்சியைப் பலப்படுத்தவேண்டிய அவசியம் எதிர்க் கட்சிகள் வளருவதால் ஏற்படும் ஆபத்து, இதைப்பற்றி, சிறு பிரசங்கமா? கர்ஜனை!—எழுப்புகிறார். ஒருவர், எழுந்து நிற்கிறார்.

"பண்டிட்ஜீ! காங்கிரஸ் கட்சியை நாம் காப்பாற்றவேண்டும். கயவனுக்கு இடம் அளிக்கக் கூடாது. காங்கிரஸ் காப்பாற்றப்பட வேண்டுமானால் அதன் கொள்கைகளை நாம் காற்றிலே விட்டுவிடக் கூடாது. இல்லையா?"

"ஆம்! நன்றாகச் சொன்னீர்கள். கொள்கைகள் மிகவும் முக்கியம். அவைகளை விட்டுவிட்டால் கட்சியேது, காங்கிரஸ் ஏது?"

"இங்கே ஒரு தகராறு—"

"காங்கிரஸ் கொள்கைகளைப் பற்றியா?"

"முக்கியமான விஷயம்குறித்து"

"என்ன அது—யார் அவ்விதம் தகராறு செய்வது?"

"கூறுகிறேன்—கேளுங்கள். மகாத்மா காந்தி, நம்மை விட்டுப் பிரியும் வரை, வலியுறுத்தி வந்தாரல்லவா கதரின் முக்கியத்துவம் பற்றி..."

"ஆமாம்! அதுவே நம் தாரக மந்திரம் எனக் கொண்டோம். காங்கிரஸ் காரனாக இருக்க, கதர் அணிவதுதான் முதல் திட்டம், என்றும் கடைப்பிடித்தோம் — கஷ்டப்பட்டோம்—"

"இப்போது?"

"இப்போதுதான்! இதிலென்ன சந்தேகம் — என்னைப் பாருங்களேன்......"

ஒரு குரல் மூலையிலிருந்து எழும்புகிறது—"அமெரிக்காவுக்குப் போனபோது?" குரல் வந்த இடத்தைக் கோபத்தோடு பார்க்கிறார். சிறிது நிசப்தம், அறையில். பண்டித நேரு, கதரின் மகத்துவம் குறித்துப் பேசுகிறார். திடீரென ஏதோ ஞாபகம் வந்தவர்போல, பேச்சை நிறுத்திவிட்டு, "இப்போது கதர் பற்றிய பிரச்னை ஏன் வந்தது?" என்று கேட்கிறார்.

"காங்கிரஸ் பார்லிமெண்டு உறுப்பினர்களில் பலர், 'கதர் உடுத்த முடியாது' எனக் கூறுகிறார்கள், பண்டிட்ஜீ!"

"பலரா?"—நேருவின், குரல் கம்முகிறது.

"ஆமாம்!"

"பார்லிமெண்டு மெம்பர்களா, கூறுகிறார்கள்"

# வழக்கு வாபஸ்

"நான் வாபஸ் வாங்கிக் கோள்கிறேன்!"

"வேண்டாம்! வேண்டாம்! நடவடிக்கைஎடுக்க வோட்டு எடுங்கள்"

வழக்கை வாபஸ் பெற்றார், வழக்குப் போட்டவர். எதிரி, 'ஏன் வாபஸ் வாங்குகிறீர்?' என்று முழக்கமிட்டார், எங்கே நடந்தது இது என்பீர். வேறெங்குமல்ல, ஆச்சாரியார் நியமனம் செய்யப்பட்டு, அமர்ந்திருக்கிறாரே, அந்த மேல்சபையில். கவர்னரை அவமதித்ததாக பிரகாசம்மீது, புகார் செய்து, 'தண்டிக்க' வேண்டுமென்று, கலர்க் கண்ணாடியார், தீர்மானமொன்று கொண்டுவந்து வக்கீல் முறையில்—வாதிட்டார். பலர், 'அநாகரீகம்', 'வெறிச்செயல்' என்றெல்லாம் கண்டித்தனர். 'எதற்கும் நான் தயார். கவர்னரைத் தடுத்துப்பேசியது நான்தான். உண்மை' என்று முழக்கமிட்டார், பிரகாசம். 'கவர்னர் யார்? தேர்ந்தெடுக்கப்பட்டவரா!' என்று கிண்டலோடு, வாதத்தின்போது சொன்னார். ஆதித்தன். கடுமையான கண்டனமாரி! கடைசியில் 'வோட் எடுங்கள்' என்றார், பிரகாசம். ஆச்சாரியாரோ 'இதுவே-போதும்' என்று கூறிவிட்டு, வாபஸ் பெற்றார். பெருந்தன்மையாக யிருக்கமுடியாது இது —ஏனெனில், அது அறியாதவர் ஆச்சாரியார்! பின், என்ன காரணம்? 83 வயதுக் கிழவரை இந்த அவமானத்திலாழ்த்திவிட்டு 'மூச்சுப் பேச்சில்லாமல்' வாபஸ் பெற்றதன் ரகசியம் என்ன???

"அவர்களேதான்!"

"என்ன காரணமாம்?"

"கதர், அவ்வளவு நாகரீகமாகவும் வசதியாகவும் இல்லையாம்..."

"அப்படியா சொல்கிறார்கள்?"— மேலும் குரல், கம்முகிறது, இந்தியப் பிரதமருக்கு.

"சொல்வது மட்டுமல்ல; கதர் அணியும் எங்களையும் கேலி செய்கிறார்கள். இதற்கு நீங்கள்தான் ஒரு முடிவு கூற வேண்டும் — நீங்கள்தானே எங்கள் வழிகாட்டி!"

"சரி—சிறிது நேரத்தில் கூறி அனுப்புகிறேன். கூச்சலும் தகராறும் வேண்டாம். நல்லதா நமக்கு?"

வந்தவழியே திரும்பி, தனது 'ஆபீஸ் அறை'யில் போய் அமருகிறார். பேனாவை எடுத்து, 'கதரே மிகவும் முக்கியம். கதரை நாம் போற்றவேண்டும். அதுவே நமது முதல் நிர்மாணத்திட்டம். ஆகவே எல்லோரும் கதர் அணிந்தே வரவேண்டும்" என்று எழுதி முடிக்கிறார்.

அப்போது—

நிதிமந்திரி சிந்தாமன் தேஷ்முக் வருகிறார்—'குட்மார்னிங்!' என்று கூறியவண்ணம். அலுங்காத சூட், கலையாத கோட், இவ்விதமாக. அவரை உற்று நோக்குகிறார்—தான் எழுதிய துண்டுக் காகிதத்தின்மேல் ஒரு 'பைலை'ப்போட்டு மூடிவிட்டு, உரையாடுகிறார். அவர்போன சிறிது நேரத்துக்கெல்லாம் பாதுகாப்பு மந்திரி கோபாலசாமி அய்யங்கார் வருகிறார், தனது 'சூட்', 'லாங் கோட்' சகிதம். பண்டித நேருவின் மனதில் ஏதோ ஒரு குழப்பம்! மனது ஒரு நிலையில் இல்லை—எதிரேயுள்ள புகைப் படங்களைப் பார்க்கிறார் — சிரித்துக்கொண்டு செஸ்டர் பௌலஸ் (அமெரிக்கத் தூதுவர்) பக்கம் பேசிய வண்ணம் நின்று கொண்டிருக்கும் சகோதரி விஜய லட்சுமியாரின் புகைப்படம்படுகிறது கண்ணில். உற்றுநோக்குகிறார், சகோதரி அணிந்திருக்கும் பளபளக்கும் பட்டாடை தெரிகிறது! மீண்டும் குழப்பம்!! பேனாவை எடுக்கிறார்—எழுதுகிறார். முன்பு எழுதிய கடிதத்துண்டு குப்பைக் கூடையில் விழுகிறது. இதை அனுப்புகிறார், காங்கிரஸ் பார்லிமெண்டு உறுப்பினர்களுக்கு. ஆவலோடு, பண்டித நேருவின் தாக்கிதை, எதிர்பார்த்து இருக்கிறார்கள், அவர்கள். வருகிறது, "தாக்கீது."

புதுடில்லி
மே-15

கதர்தான் அணிந்திருக்க வேண்டுமென மற்ற காங்கிரஸ் பார்லிமெண்டு உறுப்பினர்களை, கட்டாயப் படுத்த வேண்டாமென கதருக்காக வாதாடும் நண்பர்களைக் கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து வலியுறுத்த வேண்டாம்.

ஜவஹர்லால் நேரு

# தியாகமான்யம் திரும்புமா?

'தியாகமான்யம்' என்ற பெயரால், பற்பல காங்கிரஸ்காரர்களுக்கு, காங்கிரஸ் ஆட்சியினர் ஐந்து ஏக்கர், பத்து ஏக்கர், இனாமாக அளித்திருப்பதை நாட்டோர் அறிவர்.

உழுது பயிரிட்ட பல ஏழை விவசாயிகளிடமிருந்து, பலாத்காரமாக, இந்த முறையின் மூலம், பல இடங்களில் 'தரிசு' நிலங்கள் கைக்கொள்ளப்பட்டதும், நிலத்தை இழந்த அந்த ஏழைகள் வயிற்றையும் குடும்பத்தையும் காட்டி அலறியது எல்லாரும் அறிந்தவிஷயமே.

இப்போது, இதுபோல 'தியாகமான்யம்' தருவதை நிறுத்தி வைப்பதென சென்னை அரசியலார் முடிவு செய்திருப்பதாக அறிய வருகிறோம்—காலங்கடந்த முடிவு! எனினும், பரவாயில்லை!!

"தியாகமான்யம்" — உழைத்து உருக்குலைந்த ஏழைத் தொண்டர்களைவிட, வசதியும் வாய்ப்பும், சட்டசபையில் குரல் எட்டும் கம்பீரமும் கொண்ட "வசதியுள்ளோர்" கைக்குத்தான் போயிருக்கிறதாம்—பற்பல ஊர்களில்.

பணம் படைத்தோருக்கு "தியாகமான்யம்" மிகமிகக் கேவலமானது என்றாலும், அவர்கள் 'அதையும்' தியாகம் செய்யும் மனஉறுதி பெறவில்லை போலும்! பணஆசை யாரை விட்டது!!

இன்றைய சர்க்காரின் முடிவை யொட்டி. ஏதோ ஒருசில ஊர்களில் மட்டும் தமக்கு கிடைத்த 'தியாகமான்யத்தை' ரத்தம் செய்து அரசியலார்க்கு அறிவித்திருக்கிறார்கள், ஒரு சிலர்.

இவர்களைப் பாராட்டுகிறோம் — இப்போது ஏற்பட்ட தியாகசுபாவத்துக்காக!

நஞ்சையும் புஞ்சையும் ஏராளமாகப் பெற்று சுகபோகத்துடன் வாழும் இந்தப் பெரிய மனிதர்களுக்கு, ஏனோ இந்த ஐந்து ஏகரும் பத்து ஏகரும்? வீதி சுற்றி அலைந்து ஓய்ந்த, கொடிதூக்கும் தோழனுக்கென்றாலும், 'ஐந்து' ஏகர் ஒரு அற்புதக் காட்சியாக இருக்கும்! அவனுக்கு அளிக்கப்பட்டாலும், உடம்பிலிருக்கும் 'பிரிட்டிஷ் முத்திரை'களையும், எதிரேகிடக்கும் நிலத்தையும் காணும்போது — பெருமூச்சுக்குப் பதில், புன்சிரிப்பு ஏற்பட — வழியுமுண்டு, நியாயமுமிருக்கிறது.

பணம் படைத்தோருக்கேன், தியாகமான்யம்? பட்டமும், பதவி பாரமும் வகிப்போருக்கேன் ஐந்து ஏகரும் அதற்குமேலும்!

இதைக் குறிப்பிட்டு, காஞ்சி திராவிட முன்னேற்றக் கழகத்தார் ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிட்டிருக்கிறார்கள்—'வேண்டுகோளாக.'

"வசதியுள்ள காங்கிரஸ் முக்யஸ்தர்கள், தாம்பெற்ற தியாகமான்யத்தைத் திருப்பித் தரலாமே!"— என்பதுதான், அந்தத் துண்டுப்பிரசுரத்தின் சாரமாகும்.

மக்களுக்குச் சொந்தமான நிலம் சுகமாக வாழ்பவரிடம் போய்குவிவதால் என்னலாபம்? ஆகவே, தியாகத்துக்காக வழங்கப்பட்ட தியாகமான்யத்தை, தியாகசீலமுள்ள பணக்கார காங்கிரஸ் தலைவர்கள், உடனே 'தியாகம்' செய்யப் பின் வாங்கார் என நம்புகிறோம்.

ஒருவேளை, அவர்களுக்குள்ள பல வேலைச்சுமைகளினால், இந்த "சின்ன" விஷயத்தை மறந்திருந்தாலும் இருக்கலாம். அதை, அவர்களுக்கு, காஞ்சித் தோழர்கள் செய்ததுபோல, நினைவூட்டுமாறு கேட்டுக்கொள்கிறோம் — திராவிட முன்னேற்றக் கழகத்தவரைமட்டுமல்ல! காங்கிரஸ் சங்கங்களையும்கூட!!

2-ம் பக்கத் தொடர்ச்சி

...பக் கிழித்தவண்ணம், ரயில் வந்து ...ன்றது—ஸ்டேஷனில். இரண்டே ...ரண்டு உருவங்களை ஏற்றிய வண் ...ம், பெருமூச்சு விட்டுக்கொண்டு, ...ல விருடிக்கெல்லாம் ரயில் புறப் ...ட்டு விட்டது.

4

"சிறுக்கி மயக்கிட்டா! என் ...ள்ளை போயிட்டுது"—என்று அல ...த் துடித்தாள் குமரனின் தாய். ...திஞர் கோவிந்தப் பிள்ளை, அலமு ...ன் அம்மாவிடம். "ஐயோ! எனக் ...கான்னும் தெரியாதுங்க என் ...னத்திலே மண்ணைப் போட்டுட் ...ளே" என்று முகத்தில் அறைந்து ...காண்டாள், அம்மாளு. ஊராருக்கு ...அசைபோட' ஒரு நியூஸ்!

"படிச்ச பிள்ளையாம் பார்த் ...ங்கள்ளே!"

"காலம் கெட்டுப் போச்சுங்க"

"வேணும், கோவிந்தப் ...ள்ளைக்கு"

"எல்லாம் அந்த அம்மாளுவின் ...ந்திரம்தான்"

...வாய்க்கு வந்தபடி யெல்லாம்— ...பசினர். இந்த சம்பவத்தால்தான், ...றவர் குடிசையில் எழும்பிய கூச் ...லும் ஆரவாரமும், அவர்கள் ...வருக்கும் எட்டவில்லை.

...சிங்கி —பலி விழாவின்போது, ...பாய்விட்டாள். அஞ்சானு ...ன் அந்த அஞ்சுகம் பறந்து விட் ...து. விழாவெறியில் எவரும் அதைக் ...வனிக்கவில்லை. விடிந்ததும் தேடி ...—விபரமறியாமல் துடித்தனர். ...காவிந்தப் பிள்ளை, கொதித்துக் ...டந்தார். அவர்தானே கிராமத்து ...ணியம். அவரிடம் வந்து, முறை ...ட்டார்கள் அந்த நாடோடிகள். ...டிமேல் இடிபோலிருந்தது இது! ...ரியும் நெருப்பில் எண்ணெய் ...டுவது போலிருந்தது, இந்தப் ...கார். என்ன செய்வது? விசாரிக்க ...வண்டியவரானர். பலப்பலர், பலப் ...ல சொல்லினர். பரச்சேரியைச் ...சர்ந்த ஒருவன், அஞ்சானும் அவ ...ளும், அடிக்கடி சந்தித்துப் பேசிய ...த்தான் கண்டதாகச் சொன் ...ன். அஞ்சானுக்கு ஆள் அனுப்பப் ...டது. அவன் அங்கே இருந்தால் ...ானே? அவனும் அவளுந்தான் ...காண்டுவந்த 'கட்டிச் சோற்று ...டையை வைத்துக்கொண்டு ...த்த மைதுாக்கப்பால் உட்கார்ந் திருந்தனரே!

"அவனில்லை—ஓடிவிட்டான் -" இத்தகவல் கேட்ட பிள்ளை' துடித் தார். என்ன அக்கிரமம்? என்று கர்ஜித்தார். "போலீசில் தெரிவிக் கப் போறேன்" என்றார். அஞ் சான் அவருடைய பண்ணையாள்! "நூறு ரூபாய்" சோந்தை பெற்ற வன். அவன், தன்னை ஏமாற்றிச் செல்வதை அவரால் எப்படிச் சகிக்க முடியும்? பண்ணையாள் போய்விடுவதா? பணம்? தான் கொடுத்த பணம்? —போலீ சில் புகார் செய்யப்பட்டது. பிள்ளை யின் காலில் விழுந்து கும்பிட்டு விட்டு அந்த 'நாடோடி'க் கும்பல், புரியாத பாஷையில், ஏதேதோ பேசிக்கொண்டு, ஆலமரத்துக்குச் சென்றது. அன்றுமாலையே எங்கோ புறப்பட்டு விட்டது, அந்தக் கூட்டம்.

5

"காட்டு ரோஜா! நீ, என் கண்ணே!"

"ஆமாம்! போதும் விடுங்கள்..."

"கொய்யாப் பழம் கொண்டு வருகிறேன் — நீ மாம்பழம் தரு கிறாயா?"

"என்ன—என்ன?"

"உச்......உச்......"

இப்படிப் பேசிக் கிடந்தார்கள் குமரனும் அலமுவும்—தனி அறை—ஓட்டல் மாடி. இரண்டே புறாக்கள்! ஆனால் சிங்கியும், அஞ்சானும் இப் படி யெல்லாம் பேசவில்லை. எப்ப டித் தெரியும், இப்படி உரையாட? என்றாலும், அவர்கள் கண்களும் சிரிப்பும் இதைவிட மேலான காதல் மொழிகளை உதிர்த்துக் கொண்டிருந்தன. மரநிழல்தான் அவர்களது 'ஓட்டல்'; புதரும் மரத் தோப்பும்தான் அவர்களுக்கு 'ரூம்' அவள் பாடுவாள்—அவன் 'ஏதாவது வேலை?' என்று அலைவான். இப்படி அலைந்து கொண்டிருந்தனர். ஆனால் இவர்களது "ஜோடிப் பொருத்தம்" பலரது கண்களில் சந்தேகத்தை வரவழைக்காமலில்லை. "பறையன்—நரிக் குறத்தி"—இவ்விதம் கேலி பேசவும் தவறவில்லை. இரண்டும் மனித உடல்கள்தான்! ஆனால், உடையும் உருவமும். கிழிந்த பாவாடை—மேலே ஒரு கச்சை; கச்சைக்கும் பாவாடைக்குமிடையே தெரியும் வயிறு; பாசி மணி. மறை யாத மார்பு; அதை மூடிக் கிடக்கும் சிறு மேல் துணி; காது மணி—அவளை எவரும் புரிந்துகொண்டு விடுவார்களே!

அதனால்தான், இந்த 'ஜோடி' யைக் கண்ட, அந்த போலீஸ்காரன் சந்தேகப்பட்டு, ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றான். இன்ஸ் பெக்டர், அவனை, மேலும் கீழும் பார்த்தார். "இழுத்துக் கொண்டு போய்ப் பூட்டு" என்றார். அவள் கதறினாள். அவளை வெளியே விரட் டினர்—அவனை மட்டும் இழுத்துச் சென்றனர். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை! எப்படித் தெரியும்? "அஞ்சான் என் பண்ணையாள். வீட்டிலேயிருந்த மாடு ஒன்றைத் திருடிக்கொண்டு ஓடிவிட்டான்" என்று கோவிந்தப் பிள்ளை, செய் திருந்த புகார். அவன் கதறினான்; அவள் 'கூ கூ'வெனக் கூச்சலிட் டாள். அவன் கம்பிகளுக்குள்; அவள் புழுதி படிந்த வீதியில்புழுப் போல் துடித்தாள். அவளை நெருப் புக் குண்டத்தில் போட்டு அவிப் பது போலிருந்தது. கதறினாள்!—போலீஸ்காரர் வந்து 'ஓடு கழுதே' என்று விரட்டி யோட்டும்வரை கதறினாள்! ஏழை அஞ்சான், அலறி னான், துடித்தான். 'சாமி—அவளை ஒண்ணும் செய்யாதீங்க' என்று கூக்குரல் போட்டான். பலன், பல மான அறை, அவனுக்கு! அவள் நாயைப்போல் விரட்டப்பட்டாள். காதல் ஜோடி—ஒரு புறா கூண்டுக் குள்! மற்றொன்று புழுதியில்!!

சப்-இன்ஸ்பெக்டர், இந்தக் காட்சியைப் பற்றி அவ்வளவு கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அவர் கண், அன்றைய பத்திரிகை யில் வந்திருந்த திருமணப் படத் தையும் செய்தியையும் பார்த்துக் கொண்டிருந்தது.

"காதல் மணம்" என்ற தலைப் பிட்டு அலமுவும் குமரனும் "ரிஜிஸ் டர் கலியாணம்" செய்துகொண்ட தாகவிளம்பரம்செய்திருந்த செய்தி, புகைப்படத்தோடு வந்திருந்தது. சிரித்துக்கொண்டிருந்தார்கள் அந்த இரு சிட்டுகளும்! செய்திக்குக்கீழ்—குமரனுடைய 'தீவிரப்போக்குக்' குறித்து, சிறு குறிப்பும் தந்திருந் தார், பத்திரிகாசிரியர். ஆனால் ஏழை அஞ்சானைப்பற்றி! அவனது இதய ராணி நரிக்குறத்தியைப்பற்றி......

சப்இன்ஸ்பெக்டர்தான் டைரி, எழுதிக்கொண்டிருந்தார்!

# மஜீத் குடும்ப பாதுகாப்பு நிதி

காங்கிரஸ் பாசிச வெறிக்குப் பலியான வீரன் மஜீத் குடும்பத்தைப் பாதுகாக்க, தோழர்களே, தாராளமாக நிதி தாருங்கள். தான் கொண்ட கொள்கைக்காக தன் உயிரையே தந்த ஒரு உத்தம இலட்சியவாதிக்கு, உங்கள் காணிக்கையைச் செலுத்துங்கள்.

மேலும் நிதியனுப்ப விழைவோர் 'மஜீத் குடும்பபாதுகாப்புநிதி' என்று குறிபபிட்டு, காஞ்சிபுரம் 'திராவிட நாடு' நிலயத்திற்கு அனுப்பிவையுங்கள்.

| | |
|---|---|
| முன் வரவு | 316—3—4 |
| கொ்னை க்கானல் K M. M. மேத்தா | 20—0—0 |
| சென்னை ரத்ன கபே தொழிலாளர்கள் | 21—0—0 |
| திருவல்லிக்கேணி கேப் தொழிலாளர்கள் | 6—0—0 |
| வாலாஜாபாத் W K. தேவராசன் | 5—0—0 |
| சென்னை ரத்தினம் | 5—0 0 |
| சென்னை எஸ். எஸ். பி. லிங்கம் | 5—0—0 |
| காஞ்சி. சி. வி. ராச கோபால் | 2—0—0 |
| ,, லட்சுமணன் | 2—0—0 |
| ,, பூஞ்சோலை | 2—0—0 |
| ,, M. M ராமநாதராவ் | 2—0—0 |
| ,, T சாம்பசிவம் | 2—0—0 |
| ராயப்பேட்டை இளங்கோ மன்றத்தார் | 5—0—0 |
| தாத்தையங்கார்பேட்டை தி. மு. க. | 5—0—0 |
| கங்குவார்பட்டி S R. இராசமதுரன் | 1—0—0 |
| சென்னை அழகிரிப் படிப் பகம் S. A. பாண்டியன் மூலம் | 6—8—0 |
| திருவனந்தபுரம் S. கிருஷ்ணன் மூலம் | 11—2—0 |
| சென்னை எம். பி. ஆனந்தன் | 1—0—0 |
| மதுரை சுந்தரம் | 5—0—0 |
| சிந்தாதிரிப்பேட்டை தமிழர் அறிவுச்சோலை | 1—2—0 |
| காஞ்சீபுரம் பொதுக் கூட்டத்தில் வசூல் | 62—10—6 |

சென்னை
எலக்டிரிக் ட்ராம் கம்பெனி

| | |
|---|---|
| ஏ. பக்தவச்சலம் | 1—0—0 |
| வி. ராஜமாணிக்கம் | 1—0—0 |
| எம். ராஜீ | 1—0—0 |
| ஆர். கணேசன் | 1—0—0 |
| டி. சொக்கலிங்கம் | 1—0—0 |
| ஜி. பி. ரத்தனம் | 1—0—0 |
| ஆர். கண்ணன் | 1—0—0 |
| என். கே. சீராமுலு | 1—0—0 |
| சேஷசயனம் | 1—0—0 |
| ஆர். கோவிந்தராசன் | 1—0—0 |
| ஜி. கே. மாத்யூஸ் | 1—0—0 |
| வேலுசாமி | 1—0—0 |
| சி. வி. ராமசந்திரன் | 1—0—0 |
| என். நந்தகோபால் | 1—0—0 |
| ஆர். குப்புசாமி | 1—0—0 |
| எம். கே. ரங்கநாதன் | 1—0—0 |
| லோகநாதன் | 1—0—0 |
| எஸ். விஜயராஜ் | 1—0—0 |
| ஜி. ராஜரத்னம் | 1—0—0 |
| கே. முனுசாமி | 1—0—0 |
| பாபு ராவ் | 1—0—0 |
| ஏ. சண்முகம் | 1—0—0 |
| வி. எஸ். கோவிந்தராசன் | 1—0—0 |
| பரசுராமன் | 0—8—0 |
| கே. மன்னியப்பன் | 0—8—0 |
| கே. ராதாகிருஷ்ணன் | 0—8—0 |
| எம். ஜேவியர் | 0—8—0 |
| ஆர். சுடபிரமணி | 0—8—0 |
| ஏ. ஆரோக்யசாமி | 0—8—0 |
| எம். கே ராஜவேலு | 0—8—0 |
| பி. வி. வரதராஜலு | 0—8—0 |
| டி. முருகய்யா | 0—8—0 |
| ஜி. ஆர். கே. சிங் | 0—8—0 |
| கன்னையா | 0—8—0 |
| சே. ராமானுஜம் | 0—8—0 |
| கே ராஜு | 0—8—0 |
| எல். ஹரி | 0—8—0 |
| கே. சங்கரன் | 0—8—0 |
| எம். வீராசாமி | 0—8—0 |
| துரைசாமி | 0—8—0 |
| ரங்கநாதன் | 0—8—0 |
| கண்ணபிரான் | 0—8—0 |
| பார்த்தசாரதி | 0—8—0 |
| பாபுசிங் | 0—8—0 |
| எஸ். வெங்கடேசன் | 0-10—0 |
| டி. ராமலிங்கம் | 0—8—0 |
| சிதம்பரம் | 0—8—0 |

| | |
|---|---|
| சிவஞானம் | 0—8- |
| வீராசாமி | 0—8- |
| ஆர். சாலமன் | 0—8- |
| கன்னையா | 0—8- |
| கோவிந்தராஜன் | 0—8 |
| ராஜரத்தனம் | 0—6 |
| ஏ. சின்னய்யா | 0—4 |
| புஷ்பலிங்கம் | 0—4 |
| எம். கே. சொக்கலிங்கம் | 0—4 |
| அமீத்ஷரீப் | 0—4 |
| கண்ணன் | 0—4 |
| நாதிமுனிராவ் | 0—4- |
| கன்னியப்பன் | 0—4- |
| பாலகிருஷ்ணன் | 0—4- |
| ஞானபிரகாசம் | 0—4- |
| பொன்னுரங்கம் | 0—4- |
| வெங்கடேசன் | 0—4- |
| எல்லப்பன் | 0—4- |
| கிருஷ்ணமூர்த்தி | 0—4- |
| கோவிந்தராஜீலு | 0—4- |
| நாகரத்தினம் | 0—4- |
| ராமச்சந்திரன் | 0—4- |
| வேணுகோபால் | 0—4- |
| ஜகந்நாதம் | 0—4- |
| ஏ. பெருமாள் | 0—4- |
| பக்தவச்சலு | 0—4- |
| ராஜாராம் | 0—4- |
| எம்.ஆர். வேணுகோபால் | 0—4 |
| வெங்கடேசன் | 0—4- |
| பலராம் | 0—4- |
| ஜானகிராமன் | 0—4- |
| கிருஷ்ணசாமி | 0—4- |
| ரங்கசாமி | 0—4- |
| தர்மசிவம் | 0—4- |
| ஸ்ரீராமுலு | 0—4- |
| டி. ரங்கநாதன் | 0—4- |
| டி. பொன்னுசாமி | 0—4- |
| சில்லரைவரவு(உண்டியல்) | 1-13 |
| ஏ. கே. வெஙகடாசலபதி | 0—8- |
| டி. அய்யலு | 0—8- |
| கோவிந்தராஜலு | 0—8 |
| கருணாகரன் | 0—4 |
| பி. கஜபதி | 0—7 |
| அலமேலு அப்பாதுரை | 5—0 |
| சென்னை கோகலே ஹால் கூட்டததின் மூலம் | 128—0 |
| ஆகமொத்தம் வரவு | 663—1- |

Edited, Printed & Published by C. N. Annadurai M A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.